குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.158/2024

அ.சா.3

2025–ம் ஆண்டு ஜீன் 17–ம் தேதி செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாந்தி | தொழில் | |
| கணவர் பெயர் | பிரகாஷ் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மாலை 06.30 மணி,

Accused Mariyappan @ Meenkara Mariayappan present. Advocte Mr.I.Jayakumar present for accused. APP Mr.M.Suresh Present.

**முதல் விசாரணை :**

1. நான் ஓமலூர் பிருந்தாவன் நகர் 8 வது வீதியில் குடியிருக்கிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை தெரியும். அ.சா.2 தில்லைக்கரசி அ.சா.1–ன் வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வருகிறார். கடந்த 2024 ஆம் ஆண்டு ஒருநாள் 5 ஆம் தேதி எனது கணவருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. நான் எனது கணவருடன் நியூரோ பவுன்டேசன் மருத்துவமனையில் இருந்தேன். அன்றைய தினம் இரவு தில்லைக்கரசி வீட்டில் திருடன் நுழைந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். சம்பவம் நடந்தபோது நான் மருத்துவமனையில் இருந்தேன். போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

2. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 05.05.2024 ஆம் தேதி இரவு சுமார் 02.00 மணியளவில் அ.சா.1 பால்ராஜ் திருடன் திருடன் என்று சத்தம் கேட்டு நானும், அருகில் இருந்தவர்களும் ஓடிவந்தோம் என்றும், அப்போது பால்ராஜ் வீட்டின் கீழ்தளத்தில் இருந்து, ஒரு நபர் வேகமாக ஓடினார் என்றும், நாங்கள் துரத்திச் சென்றும் அந்த நபரை பிடிக்க முடியவில்லை என்றும், இருட்டில்

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2025.06.17 18:58:13 +0530

அந்த நபர் எங்கு சென்றார் என்று தெரியவில்லை என்றும், அதன் பின்பு பால்ராஜ் ஐ விசாரிக்க அந்த நபர் தில்லைக்கரசி குடியிருக்கும் வீட்டின் தகவை உடைத்து உள்ளே சென்று திருட முயன்றதாக என்னிடம் சொன்னதாக போலிசார் விசாரணையின் போது கூறிவிட்டு, தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.** .

**விசாரணை முடிந்த நேரம் : மாலை 06.36 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.06.17 18:58:16 +0530